குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்
எஸ்.டி.சி. எண்.36/2023

நாள் 17.02.2025
ம.சா.1 சக்திவேல்
எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரி வாசுதேவனின்மீது காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். எனது பிரமாண பத்திரிக்கையில் கண்ட சங்கதிகளை நான்சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதனை நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் ஓட்டுநராக இருக்கிறேன் மற்றும் ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருகிறேன். எனது பிரமாண பத்திரிக்கையில் பத்தி 1ல் நானும் எதிரியும் நண்பர்கள் என்று சொல்லியிருக்கும் நிலையில் எத்தனை வருடமாக நாங்களிருவம் நண்பர்கள் என்றால் 2016ம் ஆண்டிலிருந்து நண்பர்கள். எப்படி எதிரி எனக்கு நண்பரானார் என்றால் எனது மனைவியும், அவரது மனைவியும் மகளிர் குழுவில் கடன் கொடுத்த வந்த வகையில் பழக்கம். எனது மனைவியின் பெயர் ராதிகா என்றால் ஆமாம். எனது மனைவி தான் சாய்மைக்ரோ பைனான்ஸ் என்ற நிதி நிறுவனத்ததை நடத்தி வந்தார் என்றால் ஆமாம். அந்த பைனான்ஸ் முறையாக பதிவு செய்யப்பட்டதா என்றால் அது என் மனைவிக்கு தான் தெரியும். அந்த பைனான்ஸ் சம்மந்தப்பட்ட ஆவணங்களை எனது மனைவியிடமிருந்து பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைக்க முடியுமா என்றால் முடியும். எதிரி குடியிருந்து வரும் கிராமத்தில் உ்ள்ள மகளிருக்கு எனது மனைவி மகளிர் சுய உதவி குழுவின் மூலம் கடன் வழங்கி வந்தாரா என்றால் எனக்கு தெரியாது. R.D. பைனான்ஸ் தர்மராஜ் என்பவர் எனக்கு உறவினாரா என்றால் இல்லை. அவரை எனக்கு தெரியுமா என்றால் ஆமாம் அவர் லோக்கல் எனவே பழக்கம்.

எனது மனைவியும் எதிரியின் மனைவியும் சேர்ந்து மகளிர் குழுவின் மூலம் யார் யாருக்கு எவ்வளவு கடன் கொடுத்துள்ளார்கள் என்பது குறித்து நீதிமன்றத்தில் என் மனைவியிடமிருந்து விவரம் பெற்று ஒப்படைக்க முடியுமா என்றால் முடியும். எனது மாத வருமானம் என்னவென்றால் ஓட்டுநர் தொழிலின் மூலம் 40000/– வரையிலும் ரியல் எஸ்டேட் மூலம் 60000/– வரையிலும் மொத்தம்

ஒரு லட்சம் வரை வரும். ஆண்டுக்கு 12 லட்சம் ரூபாய் வருமானம் வரும் என்றால் ஆமாம். அதற்கு வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. எனது பெயரில் அசையும் சொத்துக்கள் அசையா சொத்துக்கள்எதுவுமில்லை என்றால் சரிதான். எதிரிக்கு நான் எந்த தேதியில் கடன் கொடுத்ததாக சொல்லுகிறேன் என்றால் 19.05.2018 ம் தேதியன்று கொடுத்தேன். எவ்வளவு ரூபாய் கொடுத்தேன் என்றால் 10 லட்சம் கொடுத்தேன். இந்த தொகையை எனது வங்கி வைப்பீட்டிலிருந்து எடுத்து கொடுத்தேனா என்றால் இல்லை. எனது கையில் வைத்திருந்ததை கொடுத்தேன். 10 லட்சம் அளவிற்கு ஒரு பெரிய தொகையை கையில் வைத்திருக்க வேண்டிய அவசியம் என்னவென்றால் எனக்கு வெளியில் எதுவும் வாங்க வேண்டிய அவசியமிலலை என்பதால் கையில் கையிருப்பு வைத்திருந்தேன். எதிரி எனக்கு 15000/–ரூபாய் வட்டி செலுத்தி வந்ததாக எனது பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டு சொல்லியிருக்கும் நிலையில் அதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அதற்கு காரணம் அவர் கையில் தான் கொடுத்தார் அதற்கு ஆவணம் எதுவும் எழுதிக்கொள்ளவில்லை.

எந்தெந்த தேதியில் எதிரி எனக்கு வட்டி செலுத்தினார் என்பது குறித்து நான் குறிப்புகள் எதுவும் எழுதி வைக்கவிலலை என்றால் சரிதான். எதிரி என்னிடம் கடன் வாங்கும்போது இரண்டு காசோகைளை கொடுத்ததாக சொல்லுக்கிறேனா என்றால் ஆமாம்வெற்று காசோலையை கொடுத்தாரா என்றால் இல்லை பூர்த்தி செய்து தான் கொடுத்தார். ம.சா.ஆ.1, 2 காசோலைகளில் எழுதப்பட்டிருக்கும் கையெழுத்துக்கள் வேறு வேறு நபரால் எழுதப்பட்டது என்றாலும் ஒரே நபரால் எழுதப்பட்டதாக தெரியவில்லை என்றால் சரிதான். எதிரி கொடுத்ததை ஒப்படைத்திருக்கிறேன் வேறு வேறு நபர்கள் எழுதியது எனக்கு தெரியாது. எதிரி இரண்டு காசோலைகளையும் என் முன்னிலையில் பூர்த்தி செய்து கொடுத்தாரா என்றால் இல்லை பூர்த்தி செய்ததை தான் என்னிடம் கொடுத்தார். இரண்டு காசோலைகளின் தேதியும் என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியும். முதல் காசோலையின் தேதி 15.10.2019 ம் தேதியாகும். 2 வது காசோலையின் தேதி 25.10.2019 ம் தேதியாகும்.

ஒவ்வொரு காசோலையும் 10 லட்சத்திற்கு பூர்த்தி செய்யலாம் என்று காசோலையிலேயே எழுதப்பட்டிருக்கும் நிலையில் என்ன காரணத்திற்காக ரூ.5 லட்சம் பூர்த்தி செய்யப்பட்ட 2 காசோலைகளை பெற்றேன் என்றால் எதிரி தான் 2 காசோலைகளை கொடுத்தார். எதிரிக்கு நான் கடன் கொடுத்தபோது யார் யார் என்னோடு இருந்தார்கள் என்பது குறித்து எனது வழக்கில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் என்னோடு யாருமில்லை அதனால் சொல்லவில்லை. பொதுவாக கடன் வாங்கும் நபர்கள் மாத இறுதியில் தான் வட்டி செலுத்துவது வழக்கம் என்றாலும் என்ன காரணத்திற்காக கடன் கொடுத்தபோதே 15000/-த்தை எடுத்துக்கொண்டு கடன் கொடுத்தேன் என்றால் நான் 10 லட்சம் தான் கொடுத்தேன் அவர் தான் அந்த 10 லட்சத்திலிருந்து 15000/- ரூபாய் வட்டிக்கு எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி என்னிடம் திருப்பி கொடுத்தார். எந்தெந்த தேதியில் எதிரி வட்டி செலுத்தினால் என்பது குறித்து எனது புகாரிலோ, அறிவிப்பிலோ பிரமாண பத்திரிக்கையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எந்தெந்த மாதத்திற்கு கொடுத்தார் என்பதை மட்டுமே சொல்லியிருக்கிறேன். எதிரியிடம்தொகையை கேட்டு நான் பலமுறை சந்தித்ததாக எனது மனுவில் சொல்லயிருக்கும் நிலையில் எந்த இடத்திற்கு சென்று எதிரியிடம் கேட்டேன் என்பது குறித்து எனது புகாரிலோ, அறிவிப்பிலோ பிரமாண பத்திரிக்கையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் ஆனால் எதிரியின் வீட்டிற்கு சென்று கேட்டேன்.

எதிரி வட்டி கொடுக்காததால் எதிரி என்னிடம் கொடுத்திருந்த 2 காசோலைகளையும் நானாகவே வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் எதிரியிடம் அதுகுறித்து சொல்லவில்லை என்றால் சரியல்ல சொன்னேன். ஆனால் இந்த விவரத்தை புகாரிலோ, அறிவிப்பிலோ பிரமாண பத்திரிக்கையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் காசோலை நிறுத்தி வைக்கப்பட்ட பின்னர் எதிரியிடம் சென்று என்ன காரணத்திற்காக இந்த காசோலைகளை நிறுத்தி வைத்திருக்கிறீர்கள் என்பது குறித்து கேட்கவில்லை என்றால் சரிதான். 2 வது காசோலை நிறுத்தி வைக்கப்பட்ட பின்னரும் கூட நான் எதிரியிடம் சென்று

இதுகுறித்து கேட்கவில்லை என்றால் சரிதான். பின்னிட்டு ஒரு மாதம் கழித்து தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் ஆமாம். இந்த ஒரு மாதத்தில் நான் எதிரியை சந்தித்ததாக புகாரிலோ, அறிவிப்பிலோ பிரமாண பத்திரிக்கையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரி பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் ஆமாம். எதிரி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள சங்கதிகளை மறுத்து எனது சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லயிருக்கிறேன். நான் குறிப்பிட்டு மறுத்து சொல்லவில்லை என்றாலும் பொதுவாக மட்டுமே சொல்லியிருக்கிறேன் என்றாலும் ஆமாம். அவர் சொன்ன அறிவிப்பில் உள்ள சங்கதிகள் பொய் என்று சொல்லிவிட்டேன். எதிரி அனுப்பிய அறிவிப்பில் உள்ள சங்கதிகளை நான் தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். எதிரி என்ன சொல்லியிருந்தார் என்றால் என்னிடம் பணம் வாங்கவே இல்லையென்றும் எனக்கு பணம் திருப்பி தர தேவையில்லை என்றும் சொல்லியிருந்தார். வழக்கு காசோலைகளை தவிர எதிரியுடைய எந்த காசோலையும் என்னிடமோ எனது மனைவியிடமோ இல்லையென்றால் சரிதான். என் மனைவி எதிரியின்மீது அரச்சலூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரியுமா என்றால் தெரியும் ஆனால் அந்த வழக்கின் விசாரணை குறித்து தெரியாது. அந்த புகாரில் எனது மனைவி என்ன சொல்லியிருக்கிறார் என்பது குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. என்ன காரணத்திற்காக எனது மனைவிக்கும் எதிரிக்கும் பிரச்சனையானது என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இதுகுறித்து எனது மனைவி எழுமாத்தூர் குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருக்கும் விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கையில் ,

**" வாசுதேவன் என்பவர் நாங்கள் நடத்தி வரும் சாய் டிரஸ்டின் மூலம் மகளிர் சுய உதவி குழு பணத்தை மோசடி செய்துவிட்டு அதனால் எனக்கும் எனது கணவருக்கும் ரூ.18,50,000/- பணத்தை ஏமாற்றியுள்ளார் என்பதால் நான் 20.01.2022 ம் தேதியன்று சுமார் காலை 08.00 மணியளவில் வாசுதேவன் என்பவர் வீட்டருகிலுள்ள ரவி கார் பட்டறைக்கு அருகில் நின்று கொண்டு இருந்தவரிடம் நான் என்னிடமும் எனது கணவரிடமும் லட்ச கணக்கில் பணத்தை பெற்றுக்கொண்டு நீங்கள் கொடுத்த வங்கி காசோலையினால் எங்களுக்கு பணம் கிடைக்காமல் செய்துவிட்டீர்கள் பணத்தை பெற்றுக்கொண்டு அதற்கு ஈடாக வங்கி காசோலை மூலம் பணத்தை பெற்றுக்கொள்ங்கள் என்று கூறினீர்கள் ஆனால் வங்கி காசோலை Stop payment செய்துவிட்டீர்கள் அதனால் எங்களுக்கு பணம் கிடைக்கவில்லை. நாங்கள் குடும்பத்தோடு சாவுவதை தவிர வேறு வழியில்லை என்று கெஞ்சி கேட்டபோது வாசுதேவன் என்பவர் போடி உன் புருசன் தான் என் மேல் கோர்ட்டில்கேஸ் போட்டிருக்கிறான் நீ என்ன புலம்பிட்டிருக்கிறாய் "**

என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது நான் கொடுத்த கடனுக்கு இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். எனது மனைவி புகார் கொடுத்த விவரத்தை சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். இன்று தான் முதல் தகவல் அறிக்கையில் உள்ள சங்கதிகளை தெரிந்துகொண்டேனா என்றால் ஆமாம்.

எதிரிக்கும் எனது மனைவிக்கும் வரவு செலவு இருக்கிறது என்று எனக்கு தெரியுமா என்றால் எதிரியின் மனைவிக்கும் என் மனைவிக்கும் தான் வரவு செலவு இருக்கிறது. எனது மனைவிக்கும் எதிரியின் மனைவிக்கும் இருந்த வரவு செலவிற்கு ஆதரவாக எதிரி தனது காசோலையை என்னிடம் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. என்னிடம் வாங்கிய கடனுக்கு தான் கொடுத்திருந்தார். எதிரியினுடைய இந்த வழக்கு காசோலைகள் R.D. பைனான்ஸ் தர்மராஜ்

என்பவரிடம் எதிரியால் கொடுக்கப்பட்டிருந்தது என்றாலும் எதிரி தான் R.D.



பைனான்ஸ்ல் வாங்கியிருந்த கடனை திருப்பி செலுத்திய பின்னரும் கூட அந்த காசோலையை திருப்பி கொடுக்காமல் தர்மராஜ் இருந்த நிலையில் நான் தர்மராஜிடமிருந்து வழக்கு காசோலையை பெற்று இந்த வழக்கை மோசடியாக எதிரியின்மீது தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு கடன் கொடுக்குமளவிற்கு எனக்கு பொருளதார வசதியில்லை என்றால் சரியல்ல. R.D. பைனான்ஸ் தர்மராஜின் தூண்டுதலின்பேரிலும் எனது மனைவியின் தூண்டுதலின்பேரிலும் எதிரியிடமிருந்து துர்லாபம் பெற வேண்டி இந்த பொய் வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் இந்த காசோலை மோசடி வழக்கு நிலுவையில் இருக்கும்போதே என் மனைவி அரச்சலூர் காவல் நிலையத்தில் பொய் புகார் கொடுத்து பொய் வழக்கு பதிவு செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் எனது மனைவியை சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் அவருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமுமில்லை அதனால் அவரை விசாரிக்க வேண்டிய தேவையில்லை.

மறுவிசாரணை – இல்லை